

# ஒரு தீப்பற்றாத இல்லம்



உங்களையும் உங்கள் குடும்பத்தையும் தீயிலிருந்து
பாதுகாப்பது எப்படி என்பது குறித்த ஆய்வு



## நார்வே இல்லங்களில் தீவிபத்து

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 60 பேர் நார்வேயில் தீ விபத்தால் இறந்து போகின்றனர் - அவர்களில் பெரும்பாலோனோர் தாங்கள் சொந்த வீடுகளிலேயே இறக்கின்றனர். 1,600-க்கும் மேற்பட்ட வீடுகளில் தீ விபத்து காரணமாக தீயணைப்புத் துறை அழைக்கப்படுகிறது. தீ விபத்து மற்றும் கிட்டத்தட்ட தீ விபத்து தொடர்பாக 25,000-க்கும் அதிகமான உரிமைக் கோரிக்கைகளை காப்பீட்டு நிறுவனங்கள் பெறுகின்றன. இவற்றில் பெரும்பாலான தீ விபத்துக்கள் கவனக் குறைவு அக்கறையின்மை மற்றும் அலட்சியம் காரணமாக ஏற்படுகின்றன.



## புகை கண்டுபிடிப்பு சாதனத் தேவைகள்

சட்டப்படி, ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது ஒரு புகை கண்டுபிடிப்பு சாதனமாவது பொருத்தப்பட வேண்டும். ஒரு தளத்திற்கும் கூடுதலாக உள்ள வீடுகளில், ஒவ்வொரு தளத்திலும் குறைந்தது ஒரு புகை கண்டுபிடிப்பு சாதனமாவது பொருத்தப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்யப்படுகிறது. தீ விபத்து நிகழப்போவது குறித்து, புகை கண்டுபிடிப்பு சாதனங்கள் முன்னதாகவே எச்சரித்து விடுகின்றன. உங்களையும், உங்கள் வீட்டிலுள்ளவர்களையும் காப்பாற்றிக்கொள்ள இது தேவையான நேரத்தை உங்களுக்கு அளிப்பதுடன், தீயை அணைப்பதற்குத் தேவையான நேரத்தையும் தருகிறது வீட்டு உட்கூரையின் மிக உயரமான இடத்தில் புகை கண்டுபிடிப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும். மேலும், சுவரிலிருந்து குறைந்தது 50 செ.மீ. தூரத்தில் இது இருப்பது அவசியம், புகை கண்டுபிடிப்பு சாதனங்கள் மாதத்திற்கு ஒருமுறையாவது சோதித்துப் பார்க்கப்படுவதுடன், நீண்டகாலம் வீட்டிலிருந்து வெளியே செல்கையிலும் சோதிக்கப்படுவது அவசியமாகும். சாதாரணமாக, வருடத்திற்கொரு முறையாவது பாட்டரியும் மாற்றப்பட வேண்டும்.



## தீயணைப்பு சாதனத் தேவைகள்

எல்லா வீடுகளிலும் ஒரு தீயணைப்பு நீர்க்குழாய் அல்லது தீயணைப்புக் கருவி பொருத்தப்பட வேண்டும். இரண்டையுமே பொருத்துவது நல்லது என சிபாரிசு செய்யப்படுகிறது. தீயணைப்பு சாதனம் பொருத்தப்படுவது அவசியமாகும். ஏனெனில் அவசர நேரங்களில் அதை உபயோகிப்பது எளிதாகிறது. விதிமுறைகளை கவனமாகப் படிக்கவும். தீயணைப்புக் கருவியை முறையாகத் தொடர்ந்து பராமரிப்பதும், சோதிப்பதும் முக்கியமாகும். தண்ணீர் குழாய் முனை வேலை செய்கிறதா என்றும், தண்ணீர் பாய்ச்சும் நீண்ட குழாய் விரிசலின்றி உள்ளதா என்றும் சோதிக்கவும். கையால் பிடித்துக் கொள்ளப்படும் தீயணைப்புக் கருவிகளில், அழுத்த அளவைச் சுட்டிக்காட்டும் கருவி பச்சை நிறப் நிறப் பகுதியை சுட்டிக் காட்டுகிறதா என்று சோதிக்கவும். தீயணைப்பு சாதனத்தை தலைகீழாகப் பிடித்து, அதிலுள்ள பொடி கெட்டியாகாமல் தடுக்கவும். உங்கள் தீயணைப்புச் சாதனத்தில் ஏதாவது பிழைகளையோ அல்லது சேதத்தையோ காண நேரிட்டால், உங்கள் விநியோகஸ்தரை தொடர்பு கொண்டு பழுதுபார்க்கவோ அல்லது வேறொன்றை மாற்றிப் பெறவோ செய்யவும்.

## தப்பிக்கும் வழிகள்

உங்கள் வீட்டில் தீ விபத்து நிகழுமேயானால், வீட்டிலுள்ள அனைவரும் விரைவாக தப்பித்து வெளியேறுவது முக்கியமாகும். எனவே, உங்கள் வீட்டில் தீப்பிடிக்குமேயானால், அனைவரும் எவ்வாறு உடனடியாக அதை அணைக்க முயல வேண்டும் என்று உங்கள் குடும்பத்தினருடன் நீங்கள் பேசி தெளிவுபடுத்த வேண்டும் மற்றும் ஒவ்வொரு அறையிலிருந்தும் மிகச்சிறப்பான வகையில் தப்பிக்கும் வழிகளை கட்ட வேண்டும். உங்கள் வீட்டிற்கு வெளியே முன்னதாகவே குறிப்பிடப்பட்ட பகுதியில் சந்திக்க, பேசி, ஏற்பாடு செய்யுங்கள். ஒவ்வொரு பகுதியிலும் பல குடும்பங்கள் வசிக்கும் அடுக்குமாடிக் கட்டிடங்களில், தப்பிக்கும் வழிகளை தடைகளேதுமின்றி வைக்கவும். ஜன்னல்களையும், கதவுகளையும் எளிதாகத் திறக்க முடிகிறதா என்று சோதித்துப் பார்ப்பதுடன், தப்பித்துச் செல்ல ஏணி போன்ற கூடுதல் உதவிகளும் தேவையா என்று கவனமாய் எண்ணிப் பாருங்கள்.





## தீப்பிடித்ததும் எப்படி நடந்து கொள்ள வேண்டும்

1) மதிப்பீடு: நிலைமை குறித்த உங்கள் சொந்த மதிப்பீட்டிற்கேற்ப, இந்த நடவடிக்கைகளை நீங்கள் எந்த வரிசைப் பிரகாரம் செய்ய உள்ளீர்கள் என்று நிச்சயிங்கள்.

2) மீட்பு: உங்கள் வீட்டிலிருக்கும் அனைவரையும் நீங்கள் எச்சரிப்பதை உறுதிப்படுத்துங்கள். முன்பே நிச்சயிக்கப்பட்ட சந்திக்கும் இடத்திற்கு போய்ச் சேர, ஒருவருக்கொருவர் உதவி புரிந்து கொள்ளுங்கள். அனைவரும் தப்பித்து விட்டனரா என்று உறுதி செய்து கொள்ளுங்கள்.

3) எச்சரிக்கை: தொலைபேசியில் 110 என்ற எண்ணைச் சுழற்றி தீயணைப்புத் துறைக்கு தெரிவியுங்கள். உங்கள் பெயரைக் குறிப்பிட்டு, தீப்பிடித்த கட்டிடத்தின் சரியான முகவரியைத் தெரிவிக்கவும்.

4) அணைக்கவும்: தீ அதிகமாக பரவியிருக்காவிட்டால், அதை நீங்களாகவே அணைக்க முயலுங்கள். ஆனால் அதிக இடரான செயல்களில் ஈடுபடாதீர்கள். தீப்புகை மிகவும் நச்சியல்பு அல்லது விஷத்தன்மை உடையது என்பதை மறந்து விடாதீர்கள்.

5) அறிவுரை: தீயணைப்புத் துறையைச் சேர்ந்தவர்கள் வந்ததும், அவர்களை சந்தித்து, தகுந்த ஆலோசனைகளை வழங்கவும் தீப்பிடித்தக் கட்டிடத்திலிருந்து எவராவது வெளியே வர முடியாமல் உள்ளே சிக்கியுள்ளனரா என்று அவர்கள் உடனடியாக அறியட்டும் செல்ல வளர்ப்புப் பிராணிகள் அல்லது அந்தரங்கப் பொருட்களை எடுத்து வரும் பொருட்டு, கட்டிடத்தினுள் நுழையாதீர்கள். இவ்வேலையைத் தீயணைப்புத் துறையினரிடம் விட்டுவிடுங்கள்.

# திறந்திருக்கும் நெருப்புடன் எச்சரிக்கையாக இருங்கள்



- எரியும் மெழுகுவர்த்தியை அறையினுள் வைத்துவிட்டு வெளியோருதீர்கள். எரியக்கூடிய பொருட்களருகில், எரியும் மெழுகுவர்த்தியை ஒருபோதும் வைக்கக்கூடாது. உறுதியான, தீப்பிடிக்க இயலாத மெழுகுவர்த்திப் பிடியில் மெழுகுவர்த்தி வைக்கப்பட்டுள்ளதா என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- படுக்கையிலோ, சோபாவிலோ படுத்துக் கொண்டிருக்கையில், சிகரெட்டுகளையோ அல்லது அதை ஒத்த பொருட்களையோ புகைக்காதீர்கள். நீங்கள் தூங்கிவிட்டால், சிகரெட் கையிலிருந்து விழுந்து, படுக்கையிலும், ஃபர்னிச்சர்களிலும் தீப்பிடிக்கும் அபாயமேற்படும். நீங்கள் சிகரெட் சாம்பல் கிண்ணங்களை சரிவர காலி செய்கிறீர்களா என்று கவனியுங்கள். சூடான சாம்பலை நேரிடையாய் குப்பைக் கூடையில் எறியாதீர்கள்.
- விறகடுப்பு அல்லது கணப்பு இடத்தில், உலர்ந்த விறகையே உபயோகிப்பதுடன், தகுதியான ஊதுகுழல் இருப்பதும் அவசியமாகும். பொருத்தமான ஊதுகுழல் இல்லாத ஒரு வலுவான தீ, புகை போக்கித் தீயை உண்டாக்கக்கூடும். உங்கள் கணப்பு இடத்திற்கு முன்னால் கணப்புத் தடுப்பை வைக்க மறக்காதீர்கள்.

# வேண்டுமென்றே வைக்கப்பட்ட தீயிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்



வேண்டுமென்றே வைக்கப்பட்டத் தீயிலிருந்து நீங்கள் உங்களை 100% பாதுகாத்துக் கொள்வதென்பது முடியாத காரியம். ஆனால் சில நடவடிக்கைகள் உபயோகமானதாக நிரூபிக்கப்பட்டுள்ளன.

- வேண்டுமென்றே வைக்கப்படும் தீ, பெரும்பாலும் கவனக்குறைவாக சேகரித்து வைக்கப்பட்டுள்ள அல்லது ஒதுக்கப்பட்ட தீப்பிடிக்கக்கூடிய பொருட்களுடன் துவங்குகிறது. இப்பொருட்களில், கட்டிட சாமான்கள், அட்டைப் பெட்டிகள் அல்லது வேண்டாத குப்பை பொருட்கள் போன்றவை அடங்கும். எனவே, மாடிப்படிகள், வண்டிகள் நிறுத்துமிடம் (கேரேஜ்) மற்றும் வெளிப்புற சுவர்களில், தீ வைக்கும் கலகக்காரர்களைத் தூண்டும் வகையில் எவ்வித தீப்பிடித்துக் கொள்ளும் பொருளும் இல்லாதவாறு பார்த்துக் கொள்ளவும்.
- கட்டிடத்தின் வெளிப்புற சுவர்களுக்கருகே குப்பைக் கூடைகளை வைப்பதைத் தவிர்க்கவும். பூட்டப்படாத குப்பைக் கூடைக்கும், கட்டிடம் ஒன்றிற்கும் இடையேயான தூரம், குறைந்தது 10 மீட்டர்கள் இருப்பது அவசியமாகும்.
- பல குடியிருப்பு வசதி கூட்டுறவு சங்கங்கள் இன்டர்காம் இணைப்பு மூலம் கட்டிடத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளன. அங்கீகரிக்கப்படாத தனிநபர்களை கட்டிடத்திற்குள் நுழைய அனுமதிக்காதீர்கள்.







## மின்சாதனங்களை சரியாக உபயோகியுங்கள்

- அடுப்பு: அடுப்பு எரிகையில், எப்போதும் அதன் மீது ஒரு கவனம் இருக்கட்டும். அளவுக்கதிகமான வெப்பத்தை உபயோகிப்பதை தவிருங்கள். உதாரணமாக ஒரு தொலைபேசி அழைப்பால் நீங்கள் இடைமறிக்கப்பட்டால், நீங்கள் பர்னர்களை உடனடியாக அணைத்துவிட வேண்டும். அடுப்பு அணைக்கப்பட்டு விட்டதா என உறுதி செய்து கொண்ட பின்னரே நீங்கள் வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டும்.
- வெளிப்போக்குக் குழாய் மூடி : உங்கள் அடுப்புக்கு மேலே உள்ள வெளிப்போக்குக் குழாய் மூடியை ஆண்டிற்கு இருமுறை கட்டாயம் சுத்தம் செய்ய வேண்டும். பெரும் அளவிலான எண்ணை பிசுக்கு (கிரீஸ்) இங்கு சேர்ந்து வருகிறது மற்றும் அடுப்பிலிருந்து வரும் வெப்பம் அதிகமாக இருந்தால் இந்த பிசுக்கில் தீப்பிடிக்கக்கூடும்.
- வாஷிங் மெஷின்கள் மற்றும் துணிகளை உலர வைக்கும் சாதனங்கள்: வீட்டை விட்டு வெளியே செல்லுகையில் வாஷிங் மெஷின், டிஷ் வாஷர் மற்றும் துணிகளை உலர்த்தும் சாதனங்களை எப்பொழுதும் அணைத்துவிட்டுச்(ஆஃப்) செல்லுங்கள். நீங்கள் தூங்கும்பொழுது இந்த சாதனங்களை ஓடவிடக்கூடாது. ஒவ்வொரு முறை உபயோகித்த பின்னும் உங்கள் துணி உலர்த்தும் சாதனத்தின் லின்ட் திரையை சுத்தம் செய்யவும்.
- தொலைக்காட்சி : நீங்கள் வீட்டை விட்டு வெளியே போகும்பொழுதும், தூங்கப் போகுமுன்னும், உங்கள் தொலைக்காட்சியின் ஆன்/ஆஃப் பட்டனை அழுத்தித்தான் எப்பொழுதும் தொலைக்காட்சியை அணைக்க வேண்டும். ரிமோட் கண்ட்ரோலை மட்டுமே உபயோகித்து தொலைக்காட்சியை அணைப்பது போதாது.
- மற்ற பிற மின்சாதனங்கள்: தெர்மோஸ்டாட்டால் கட்டுப்படுத்தப்படும் எந்தவொரு சாதனத்தையும், (காபி இயந்திரங்கள், தண்ணீர் பாய்லர்கள், இஸ்திரிப் பெட்டிகள், கூந்தலை உலர வைக்கும் சாதனங்கள்), அவை உபயோகத்திலில்லாதபொழுது, ப்ளக்கை கழற்றி வைக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குப்பின் தானாகவே மின்சாரத்தைத் துண்டிக்கும் ஒரு டைமரை உபயோகிப்பது சிபாரிசு செய்யப்படுகிறது.

## மின்சாரக் கம்பி இணைப்புகளை மரியாதையுடன் நடத்துங்கள்

வீட்டிலுள்ள மின்சாரக் கம்பி இணைப்புகள் சரியான வகையில் இருப்பதற்கு வீட்டுச் சொந்தக்காரர்கள்தான் பொறுப்பு எந்த ஒரு வெளிவழியோ ப்ளக்குகளோ, மின்சாரக் கம்பிகளோ அல்லது ஃப்யூஸ்களோ ரொம்ப சூடானாலோ அல்லது எரிந்த அடையாளக் குறிகளிலிருந்தாலோ, உங்கள் பகுதி மின்சார அதிகாரி அல்லது அங்கீகரிக்கப்பட்ட மின்சார நிபுணரை முடிந்த அளவு விரைவாக கூப்பிட்டனுப்பவும் நீங்களாகவே பழுதுபார்க்க முயலாதீர்கள். ''பொழுதுபோக்கு மின்சார நிபுணரைக்'' கூப்பிட்டு பழுதுபார்க்கச் செய்வதும் சட்டத்திற்குப் புறம்பானதும் ஆபத்தானதுமாகும்.

en annen type

110

## தணிக்கைப் பட்டியல்

| | சரி | சரியில்லை |
|---|---|---|
| 1. புகை கண்டுபிடிப்பு சாதனம் சரியாக பொருத்தப்பட்டுள்ளது மற்றும் திட்டமிட்டபடி வேலை செய்கிறது | | |
| 2. அவசியமான வீட்டுத் தீயணைப்பு சாதனம் பொருத்தப்பட்டுள்ளது மற்றும் அது எங்கே பொருத்தப்பட்டுள்ளது என்று அனைவருக்கும் தெரியும். | | |
| 3. தப்பித்துச் செல்லும் வழிகள் தடைகளின்றி உள்ளன மற்றும் உங்கள் வீட்டின் வெளியே ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட இடத்தில் சந்திக்க, உங்கள் குடும்பம் ஒப்புக் கொண்டுள்ளது. | | |
| 4. தீப்பிடித்தவுடன் எப்படி உடனடியாக செயல்படுவது என்றும், தீயணைப்புத் துறையின் எண்ணையும் (110) அனைவரும் அறிவர். | | |
| 5. உறுதியான, தீப்பிடிக்க இயலாத மெழுகுவர்த்திப் பிடிகளில் மட்டுமே எரியும் மெழுகுவர்த்திகள் வைக்கப்பட்டுள்ளன மற்றும் நிலையான தொடர்ந்த மேற்பார்வையின் கீழ் மட்டுமே அவை வைக்கப்பட்டுள்ளன. | | |
| 6. மாடிப்படிகள், கார் நிறுத்துமிடங்கள் மற்றும் வெளிப்புறச் சுவர்களில் வேண்டுமென்றே எரிக்கும் கலகக்காரர்களைத் தூண்டும் வகையில் எந்த விதமான தீப்பிடிக்கக்கூடிய பொருட்களும் இல்லை. | | |
| 7. உபயோகத்திலிருக்கையில், தொடர்ந்த கண்காணிப்பின்கீழ் அடுப்பு வைக்கப்பட்டுள்ளது மற்றும் வெளியேற்று குழாயின் மூடி முறையாக சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. | | |
| 8. வாஷிங் மெஷின்களும், துணிகளை உலர வைக்கும் சாதனங்களும், அனைவரும் உறங்குகையிலும், அவற்றை கவனித்துக் கொள்ள வீட்டில் ஒருவரும் இல்லாதபொழுதும் உபயோகப்படுத்துவதில்லை. | | |
| 9. ரிமோட் கன்ட்ரோலால் மட்டுமின்றி ஆன்/ஆஃப் பட்டனை உபயோகித்தும் டெலிவிஷன் செட் எப்பொழுதும் அணைக்கப்படுகிறது. | | |
| 10. மின்சாரக் கம்பி இணைப்புகளில் பழுது ஏற்பட்டாலோ மற்றும் மாற்றவேண்டுமென்றாலோ, அவற்றை அங்கீகரிக்கப்பட்ட மின்சார நிபுணர் மட்டுமே செய்வார். | | |

Norsk brannvernforening

Stiftelsen Norsk brannvernforening
Postboks 6703 St. Olavs plass, 0130 Oslo
Internett: www.brannvernforeningen.no

Denne brosjyren finnes på flere vanlige minoritetsspråk, og kan bestilles eller lastes ned fra www.brannvernforeningen.no.
Brosjyren er utviklet med støtte fra Utlendingsdirektoratet og Direktoratet for samfunnssikkerhet og beredskap.